

# சேமிப்பின் அவசியம்

பறவைகள், மிருகங்கள் மற்றும் இதர பிராணிகள் கூட ________________ வருவதற்கு முன்பு தங்களுக்குத் தேவையான ________________ சேகரித்து வைத்துக் கொள்கின்றன.

இப்படிச் சிற்றறிவு படைத்த பிராணிகளே சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் போது பகுத்தறிவு பெற்ற நமக்கு அதன் அவசியம் பற்றிச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. ‘வெள்ளம் வருமுன் அணைபோடு’ என்ற பழமொழி, ________________ அவசியத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆனால், எத்தனை பேர் அவற்றின் உள் அர்த்தங்களை உணர்ந்து நடக்கின்றனர் எனப்பார்த்தால் மிகக் குறைவானவர்களே என்பது தெரிய வருகிறது.

சேமிக்கும் பழக்கம் ________________________ தொடங்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அதற்காகவே, பல சேமிப்பு வங்கிகள் பிள்ளைகள் சேமிப்புப் பகுதியைத் திறந்து வைத்திருக்கின்றன. சிறுவயதிலேயே அப்படி ஓர் ______________________ ஏற்படுத்தாததால்தானோ என்னவோ நம்மிடையே சேமிக்கும் பழக்கம் மிகக் குறைவாக இருக்கிறது.

ஆபத்து அவசர நேரத்தில் உதவும் சேமிப்பு மிகவும் பயனுள்ளது என்பர். அதன் அவசியத்தை உணர்ந்தவர்களே தொடர்ந்து சேமிக்கின்றனர். ஒருவரிடம் எப்போதுமே பணம் இருந்து கொண்டே இருக்காது. தட்டுப்பாடு ஏற்படும் நேரமும் உண்டு. அப்போது __________________ உதவியை நாடுவது? அவசரத் தேவைகளான மருத்துவச் செலவு,

LIVEWORKSHEETS

பள்ளிக்கூட கட்டணம் போன்றவற்றைத் தீர்க்கக் கடன் கேட்கப்போவது தவிர வேறு வழியில்லை. அந்தக் கடனுக்கும் _______________ செலுத்த வேண்டும்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போல் சிறிது சிறிதாகச் சேமித்து வைத்திருந்தால் நேரே வங்கிக்குச் சென்று சேமித்து வைத்திருக்கும் பணத்தை எடுத்து வரலாம். பிரச்சனைகளைத் தீர்க்கலாம். கண்மூடித்தனமாகச் செலவு செய்வதை முதலில் தவிர்க்க வேண்டும். கையில் பணம் ____________________________ என்று தேவையில்லாதவற்றை வாங்குவதைத் தவிர்த்து அப்பணத்தை அப்படியே _______________________ சேமித்து வைக்க வேண்டும். தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

மற்றவர்களின் உதவியை நாடாமல் நமது _____________________________ பூர்த்திச் செய்து கொள்ள வேண்டுமானால் ஒவ்வொருவரும் சேமிக்க வேண்டியது அவசியமாகும்.

| | | | |
|---|---|---|---|
| குளிர்காலம் | சேமிக்கும் | சிறு வயதிலேயே | வங்கியில் |
| வட்டி | மிஞ்சியிருக்கிறதே | யாருடைய | உணவுகளைச் |
| அவசரத்தேவைகளைப் | உணர்வை | | |

LIVEWORKSHEETS